செ.வெ.எண்.33 நாள் : 15.03.2021

# அரியலூர் மாவட்டம்

## தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், அரசினர் மேல்நிலைப்பள்ளியில் சுகாதாரத்துறையின் சார்பில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (15.03.2021) துவக்கி வைத்து, மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,

அரியலூர் மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் (National Deworming Day - 2021) வழங்கும் முகாம் முதல் சுற்று இன்று 15.03.2021 முதல் 20.03.2021 (திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை) வரையிலும், இரண்டாவது சுற்று 22.03.2021 முதல் 27.03.2021 (திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை) வரையிலும் நடைபெறுகிறது. மேற்கண்ட நாட்களில் விடுபட்ட குழந்தைகளுக்கு 29.03.2021 அன்று குடற்புழு நீக்க மாத்திரைகள், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெறும் சிறப்பு முகாமில் (Mop up Day) வழங்கப்பட உள்ளது.

மேற்கண்ட முகாமில் 1 வயது முதல் 19 வயது வரையிலான சுமார் 2,04,651 குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர்கள் மற்றும் மகளிர் (20 முதல் 30 வயது வரை உள்ளவர்களக்கு) குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளது. முகாமில் பொது சுகாதாரத்துறை பணியாளர்களான 114 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 251 மருத்துவப்பணியாளர்கள் மற்றும் 714 அங்கன்வாடிப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணிபுரிய உள்ளார்கள்.

1 வயது முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 200 mg (1/2 மாத்திரை) 2 வயது முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினர்களுக்கு 400 mg (முழு மாத்திரை) மற்றும் மகளிர் 400 mg (முழு மாத்திரை) வழங்கப்பட உள்ளது. குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு இரத்தசோகை நோய் வராமல் தடுக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

இம்மாவட்டத்தில், பள்ளி ஆசிரியர்கள், அங்கன்வாடி மைய பணியாளர்கள், பள்ளி நிர்வாக குழுவினர், பெற்றோர் ஆசிரியர் கழக சங்கத்தினர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்கள் குடற்புழு நீக்க மாத்திரையின் பயன் பற்றியும், மாத்திரைகள் கொடுக்கப்படும் நாள் பற்றியும் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் எடுத்துககூற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கோட்டாட்சியர் ஏழுமலை, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தியாகராஜன், வட்டாட்சியர் ராஜமூர்த்தி, பள்ளி துணை ஆய்வாளர் பழனிசாமி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**